இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

கலைஞர் 100 1924 - 2024

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 138 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 12 – வெள்ளிக்கிழமை 27 டிசம்பர் 2024 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 138: Thiruvalluvar Year - 2055 - Margazhi 12 - Friday 27 December 2024 - Trichy ★★ 10 Pages ₹ 5.00

## பேரறிவுச் சிலையின் வெள்ளி விழா! ஆர்வமுடன் பங்கேற்கும் இளைய தலைமுறை! அய்யன் வள்ளுவர் வகுத்த

# தமிழ் வாழ்வியல் நெறியை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதில் மகிழ்ச்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



**சென்னை, டிச. 27 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் குமரிமுனையில் 133 அடி அய்யன் திருவள்ளுவர் சிலை அமைத்து 25 ஆண்டுகள் ஆனதையொட்டி வெள்ளி விழா - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 30, 31 ஆகிய இரு தினங்களில் எழிலார்ந்த முறையில் விழா நடைபெறுகின்றது. இதனை முன்னிட்டு தமிழ்நாடு செய்தித்துறை போட்டிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இப்போட்டிகளில் பங்கேற்றிட 17, 788 பேர் விண்ணப்பித்திருந்தனர். இதனை, 'இளைய தலைமுறையினர் அய்யன் வள்ளுவர் வகுத்துள்ள தமிழ் வாழ்வியல் நெறியை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதில் மகிழ்கிறேன்' என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுபற்றிய விபரம் வருமாறு:-

கன்னியாகுமரியில் கடல் நடுவே உள்ள பாறையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் - வெள்ளி விழா கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி தமிழ்நாடு அரசு சார்பில் திராவிட மாடல் அரசின் நாயகர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வருகிற 30, 31 தேதிகளில் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா கொண்டாடப்பட உள்ளது.

முதல் 2 நாட்கள் நடைபெறும் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.

அப்போது திருவள்ளுவர் சிலைக்கும், விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கும் இடையே அமைக்கப்பட்டு வரும் கண்ணாடி பாலத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.

திருவள்ளுவர் சிலை அமைத்து 25 ஆண்டு கால - வெள்ளி விழாவினை குறிக்கும் வகையில் கடந்த 20ஆம் தேதி வெளியிட்ட சமூக வலை தளப் பதிவில் "சமத்துவம் போற்றும் உலகப் பொதுமறை படைத்த வள்ளுவருக்கு, குமரி எல்லையில் வானுயரச் சிலை அமைத்து 25 ஆண்டுகள். மூப்பிலா தமிழில் முப்பால் படைத்த திருவள்ளுவருக்கு கலைஞர் அமைத்த சிலையை Statue Of Wisdom ஆக கொண்டாடுவோம்." என்று குறிப்பிட்டு இருந்தார்.

இந்நிலையில் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைத்து 25 ஆண்டு கால - வெள்ளி விழாவினை கொண்டாடும் வகையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் பல்வேறு திருக்குறள் போட்டிகள் நடத்தப்படும் என்று அறிவித்து இருந்தது.

- **திருக்குறள் ஒப்பித்தல் போட்டி,**
- **கட்டுரைப் போட்டி**
- **குறும்படப் போட்டி**
- **கவிதைப் போட்டி**
- **சுயமிப் (செல்ஃபி) போட்டி**
- **ஓவியப் போட்டி**

தமிழ் மீதும் பற்று கொண்டு ஆர்வமுடன் பதிவு செய்துள்ளதை கண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது:

"வள்ளுவ முனைதனில் வானுயர நிற்கும் பேரறிவுச் சிலையின் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் ஆர்வமுடன் பங்கெடுக்கும் இளைய தலைமுறை, அய்யன் வள்ளுவர் வகுத்துள்ள தமிழ் வாழ்வியல் நெறியை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதில் மகிழ்கிறேன். வள்ளுவம் போற்றுதும்.

> **"வள்ளுவ முனைதனில் வானுயர நிற்கும் பேரறிவுச் சிலையின் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் ஆர்வமுடன் பங்கெடுக்கும் இளைய தலைமுறை, அய்யன் வள்ளுவர் வகுத்துள்ள தமிழ் வாழ்வியல் நெறியை அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதில் மகிழ்கிறேன்! வள்ளுவம் போற்றுதும்!"**

வள்ளுவம் என்பது வாழ்வியல் நெறியாக மாற வேண்டும். சமுதாயம், குறள் சமுதாயமாக மலரணும். வேற்றுமையின் வேர்களை கிள்ளி எறிய வள்ளுவ மருந்தே பொது மருந்தாக மாற வேண்டும். வாழிய குறளும், வள்ளுவன் புகழும், வாழிய வாழியவே..." இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள பதிவில் தெரிவித்துள்ளார்.

---

## மதுரையில் – ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு

# இந்துஸ்தான் 'ஜிங்க்' நிறுவனத்துக்கு டங்ஸ்டன் சுரங்கம் தோண்டும் அனுமதியை ரத்து செய்க!

## ஒன்றிய அரசுக்கு – அமைச்சர் துரைமுருகன் வலியுறுத்தல்!

**சென்னை, டிச. 27 -**

**ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனம் டங்ஸ்டன் சுரங்கம் தோண்டுவதற்கான அனுமதியை ஒன்றிய அரசு ரத்து செய்ய வேண்டும் என்றும், இது தொடர்பாக ஒன்றிய அமைச்சகமும், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமியும் வெளியிட்ட அறிக்கைகளுக்குப் பதிலளித்து நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**



டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் குறித்த எடப்பாடி பழனிசாமியின் குற்றச் சாட்டை மறுத்துள்ள நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள், டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்நாடு அரசு சார்பில் கடந்த ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியதாக தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், டங்ஸ்டன் சுரங்க ஏலத்தில் பல அடிப்படையான குறைபாடுகள் உள்ளதை தெளிவாக சுட்டிக்காட்டியும், மாநில அரசு மட்டுமே கையாள வேண்டிய சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்பதை விளக்கியும் ஒன்றிய சுரங்கத்துறை அமைச்சருக்கு கடந்த ஆண்டு அக்டோபர் 3ஆம் தேதி கடிதம் எழுதியதாகத் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய புவியியல் மற்றும் சுரங்க ஆணையர், மாநில சுரங்க அமைச்சகத்திற்கு அனுப்பிய கடிதத்தில், அரிட்டாப்பட்டியின் உயிரியல் பன்முகத்தன்மை பாரம்பரிய தளத்தை உள்ளடக்கியது என்பதைத் தவிர, வேறு எந்த நில விவரங்களும் குறிப்பிடப்படவில்லை என்றும், இருப்பினும், கனிமத் தொகுதியில் ஒரு பல்லுயிர் பாரம்பரிய தளம் இருப்பதை முழுமையாக அறிந்த ஒன்றிய சுரங்க அமைச்சகம் ஏல நடவடிக்கையை தொடர்ந்ததாகவும் அமைச்சர் துரைமுருகன் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது, ஒன்றிய சுரங்க அமைச்சகம் ஏலம் மட்டுமே விட முடியும் என்றும், சுரங்கத்திற்கான குத்தகையை மாநில அரசுதான் வழங்க வேண்டும் என்பதை ஒன்றிய சுரங்க அமைச்சகம் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

இந்த சுரங்க ஏலத்தால் ஏற்படும் சட்டம்ஒழுங்கு பிரச்சினைகளை மாநில அரசு மட்டுமே எதிர்கொள்ள வேண்டிய நிலையில், இதற்கான வருவாய் மாநில அரசுக்கு மட்டுமே சேரும் என்ற போது, மாநில அரசின் எதிர்ப்பை மீறி ஒன்றிய அரசு ஏன் ஏலத்தை மேற்கொண்டது என்று அமைச்சர் துரைமுருகன் கேள்வி எழுப்பி உள்ளார்.

இவ்விவகாரம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதியதைத் தொடர்ந்து சுரங்க ஏலத்தை மறுஆய்வு செய்ய ஒன்றிய சுரங்க அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

சுற்றுச்சூழல் மற்றும் ஆயிரக் கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறு வனத்திற்கு சுரங்க ஒப்பந்தம் வழங்கியதை ஒன்றிய அரசு ரத்து செய்ய வேண்டும் என்று அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

---

## மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின்

# சரஸ்மேளா - மாபெரும் விற்பனைக் கண்காட்சி!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

சென்னை, டிச. 27 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடையும் வகையிலும், அவர்களின் தயாரிப்புப் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், மாநில / மாவட்ட / வட்டார அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சிகள், மதி அனுபவ அங்காடி, மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள், மதி அங்காடி, மதி இணையதளம், மதி சிறுதானிய உணவகம், இயற்கைச் சந்தைகள் மற்றும் விற்பனைக் கண்காட்சிகள் என பல்வேறு செயல்பாடுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வருவதன் வாயிலாக இன்று சுய உதவிக் குழுக்கள் பொருளாதார முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறையானது கிராமப்புற கைவினைக் கலைஞர்கள் தங்களின் தயாரிப்புப் பொருட்களை காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏதுவாக பல்வேறு மாநில அரசுகளுடன் இணைந்து 'சரஸ்' (SARAS) எனப்படும் விற்பனை கண்காட்சிகளை நடத்தி வருகிறது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (27.12.2024) மாலை 4.00 மணியளவில் சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் சரஸ் மேளா மற்றும் மாநில அளவிலான மாபெரும் விற்பனைக் கண்காட்சியினை துவக்கி வைக்க உள்ளார்.

இந்தக் கண்காட்சியில், ஆந்திரா மாநிலத்தின் அழகிய மரச் சிற்பங்கள், கொண்டப்பள்ளி பொம்மைகள், குஜராத் மாநிலத்தின் கைத்தறி ஆடைகள், பீகார் மாநிலத்தின் மதுபாணி ஓவியங்கள், கேரள மாநிலத்தின் பாரம்பரிய உணவு வகைகள் மகாராஷ்ட்ரா மாநில கோண்ட் பழங்குடியினரின் வண்ண ஓவியங்கள் உள்ளிட்ட கலைநயம் மிகுந்த கைவி னைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட வுள்ளன.

மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், நாச்சியார்கோவில் குத்து விளக்குகள், கடலூர் முந்திரிப் பருப்பு, தருமபுரி சிறுதானிய தின்பண்டங்கள், ஈரோடு தரை விரிப்புகள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், கன்னியாகுமரி வாழை நார் பொருட்கள், நாமக்கல் கொல்லி மலை அரபுளி காபித்தூள், கரூர் கைத்தறி துண்டுகள், சிவகங்கை பாரம்பரிய அரிசி வகைகள், திருவண்ணாமலை ஜவ்வாது மலை தேன், சிறுதானியங்கள், தூத்துக்குடி பனை பொருட்கள், பனை வெல்லம் (கருப்பட்டி), விழுப்புரம் சுடுமண் சிற்பங்கள், கோரைப் பொருட்கள், அலங்கார விளக்கு திரைகள், விருதுநகர் செட்டிநாடு புடவைகள், அரியலூர் முந்திரி பருப்பு, கோயமுத்தூர் மூலிகை சோப்புகள், திண்டுக்கல் சின்னாளப்பட்டி சேலைகள், திருச்சி செயற்கை ஆபரணங்கள், தேனி சானிடரி நாப்கின் மற்றும் திருநெல்வேலி அல்வா போன்ற பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

2024 டிசம்பர் 27ஆம் தேதி முதல் 2025 ஜனவரி 09ஆம் தேதி வரை நாள்தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெறும் சரஸ் மேளாவில் உணவு அரங்குகள், பல்வேறு கலை நிகழ்ச்சிகள், இலவசமாக வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற அம்சங்கள் நிறைந்துள்ளன. இக் கண்காட்சிக்கு அனுமதி இலவசம்.

இத்தகைய சிறப்புமிக்க சரஸ் மேளா மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் மாநில அளவிலான மாபெரும் விற்பனை கண்காட்சிக்கு பொதுமக்கள் அனைவரும் வருகை தந்து, பல்வேறு மாநில மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த தரமான பொருட்களை வாங்கி பயனடைவதோடு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிட வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.